(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 PTM 205**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** | **மதிப்பெண;கள் : 50**

**இரண்டாம் பருவம்** | **நேரம் : 3 மணி**

# பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும்

**பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

## பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (K1)

1. “தம்பமாய் நிற்கும் தவமுடையே னாவேனே” என்ற வரியில் ‘தம்பம்’ என்பதன் பொருள் என்ன?
   அ) இசைக்கருவி ஆ) முட்புதர் இ) கடுகு ஈ) kPd;
2. தேம்பாவணியில் அமைந்துள்ள படலங்கள் எத்தனை?
   அ) 36 ஆ) 38 இ) 12 ஈ) 22
3. கலிங்கத்துப்பரணியில் போர் வருணனையைப் பற்றிய பகுதிகள் எத்தனை?
   அ) 13 ஆ) 12 இ) 10 ஈ) 9
4. வள்ளலார் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?
   அ) மா.க. காமாட்சிசுந்தரன் இ) மா.க. காமாட்சிநாதன்
   ஆ) மா.க. மீனாட்சிசுந்தரன் ஈ) மா.க. கல்யாணசுந்தரன்
5. “அருள் தரித்த நாதர் பாதம் அம்மைபாதம் உண்மையே” எனப் பாடியவர் யார்?
   அ) கடுவெளிச்சித்தர் ஆ) சிவவாக்கியார் இ) பட்டினத்தார் ஈ) குதம்பைச்சித்தர்

**கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி (K2)**

6. உடலினுள் இருளாக மூடிக்கிடப்பனவாக மாணிக்கவாசகர் குறிப்பிடுவன யாவை?
7. சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர் யார்?
8. நந்திக்கலம்பகம் குறிப்பிடும் ஆவணி காலத்தில் பூத்துக்குலுங்கும் பூக்கள் எவை?
9. திருக்குற்றாலக் குறவஞ்சி யாருடைய விருப்பத்திற்கு ஏற்ப அரங்கேற்றப்பட்டது?
10. சித்தர் என்ற சொல்லின் பொருள் யாது?

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

**பகுதி – ஆ** **(5x3=15** மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K3)**

11. அ) நாயினும் கீழ்மையுடையவன் என்று சுந்தரர் பாடக் காரணம் என்ன?

(அல்லது)

ஆ) தாயுமானவர் இறைவன்பாற் கொண்ட பற்றை பைங்கிளி வாயிலாக எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

12. அ) தேம்பாவணி காட்சிப்படலத்தில் மரியாளின் பெருமைகள் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

(அல்லது)

ஆ) நபிகள் நாயகம் பயணம் செய்த பாதையின் கொடுமைகளைக் காட்சிப்படுத்துக.

13. அ) நந்திவர்மனின் வீரம் எத்தகையது?

(அல்லது)

ஆ) தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தலை நந்திக் கலம்பகம் பாடல் top சுருக்கி வரைக.

14. அ) வள்ளலார் பிள்ளைத் தமிழில் செங்கீரை பருவ நிகழ்வைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) இராசராச சோழன் உலா கூறும் சோழர் குல முன்னோர் சிறப்புகள் நான்கினைத் தருக.

15. அ) சித்தர்கள் குறித்து வரையறை செய்க.

(அல்லது)

ஆ) பிறப்பறுக்கும் வழிமுறைகளாக குதம்பைச்சித்தர் கூறுவன யாவை?

**பகுதி – இ** **(5 x 5 = 25** மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

(K4/K5)

16. அ) கபாலீஸ்வரருக்கு எடுக்கும் திருவிழாக்களை பூம்பாவை திருப்பதிகத்தின் வழி விவரி.

(அல்லது)

ஆ) பாஞ்சசன்னியச் சங்கின் பெருமைகளாக ஆணடாள் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

17. அ) தேம்பாவணி காட்சிப்படலத்தின் வழியாக அறியப்படும் இயேசுநாதரின் மகிமைகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) சுரத்தில் புனலழைத்த படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. அ) கலிங்கத்துப்பரணியில் பேய் முறைப்பாடு பகுதி எடுத்துரைக்கும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

ஆ) வண்டுவிடு தூதின் இலக்கிய சுவையை எடுத்துரைக்க.

19 அ) திருக்குற்றால நாதர் திருவீதி உலா நிகழ்வுகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) மூவருலாவின் பாட்டுடைத்தலைவன் பெருமைகளையும் அவன் Fyg; பெருமைகளையும் விவரி.

20. அ) கடுவெளிச் சித்தரின் இறைவன் குறித்த சித்தாந்தத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) பட்டினத்தார் மனதை முன்னிறுத்தி பாடியவற்றை விளக்குக.

***ETHICAL PAPER***

********